வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 24.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

உலகமே இந்தியாவிவை நம்பிக்கையுடன் எதிர் நோக்குவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதித் திட்டத்தின் 19ஆவது தவணையின் கீழ், 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, விடுவித்தார்.

பாலியல் வன்கொடுமைகளை தடுக்க, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, ஒழுக்க நெறி சார்ந்த பயிற்சி வகுப்புகள் தேவைப்படுவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற விவசாயிகள் கவுரவ விழாவில் துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

-------------------------

*மோடி-மாநாடு 1 (15)*

இந்திய வரலாற்றில், முதல்முறையாக, உலகமே இந்தியாவிவை நம்பிக்கையுடன் எதிர் நோக்குவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மத்திய பிரதேச மாநிலம் போபாலில், உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டை இன்று தொடக்கி வைத்து பேசிய அவர், பொருளாதார வல்லுனர்கள், நிறுவனங்கள் மற்றும் நாடுகள்

பலவும், இந்தியாவின் மீது மிகுந்த எதிர்பார்ப்புகளை வைத்து இருப்பதாக தெரிவித்தார். உலக வங்கி உட்பட, சர்வதேச நாடுகளின் முக்கிய நிறுவனங்கள் யாவும், இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடு என்று தெரிவித்துள்ளன என்றார். நமது நாட்டின் மீது உலகிற்கு ஏற்பட்ட இந்த நம்பிக்கை, மாநிலங்களுக்கும் நம்பிக்கையை அளித்துள்ளதாகக் கூறினார். ஐநாவின் பருவநிலை மாற்றத்திற்கான அமைப்பு, சூரிய சக்தி உற்பத்தியில் இந்தியா முன்னோடி நாடாக விளங்குவதை சுட்டி காட்டி உள்ளது என்றும் திரு. மோடி குறிப்பிட்டார். நாட்டின் வளர்ச்சியில் ஜவுளித் துறை, சுற்றுலா, மற்றும், தொழில்நுட்பம் போன்றவை முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்த பிரதமர், இந்த துறைகளில், பாரம்பரிய திறன்களை

மோடி-மாநாடு 2 (5)

ஊக்குவிப்பதோடு, நவீன தொழில்நுட்பங்களை கொண்டு வருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார். இந்தியாவில், உள்கட்டமைப்பு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏராளமான முதலீடு வாய்ப்புகள் உள்ளன என்றும், இதனை உலக முதலீட்டாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

-------------------------

*பிரதமர்-கிசான் (13)*

பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதித் திட்டத்தின் 19ஆவது தவணையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, பீகார் மாநிலம் பாகல்ப்பூரில் வெளியிட்டார். இத்திட்டத்தின் கீழ், 9.8 கோடி விவசாயிகளுக்கு, 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை, அவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப் பட்டுள்ளது. பிரதமரின் கிசான் திட்டத்தின் 6ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்நிகழ்ச்சி குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில், பிஎம் கிசான் சம்மான் நிதித் திட்டத்தின் 6ஆவது ஆண்டு நிறைவு விழாவில், நாடு முழுவதும் உள்ள வேளாண் சகோதர, சகோதரிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து

கொள்வதாக தெரிவித்துள்ளார். அவர்களின் வங்கிக் கணக்குகளில் மூன்றரை லட்சம் கோடி ரூபாய் சேர்ந்திருப்பது தனக்கு அபரிமிதமான திருப்தியையும், பெருமையையும் அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

-------------------------

*தொழிலாளர் நலன் (12)*

தொழிலாளர் நலன் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தை மேம்படுத்துவது குறித்து மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இயக்குநர் ஜெனரல் கில்பர்ட் ஹவுங்போவுடன், இன்று புதுடெல்லியில் பேச்சு வார்த்தை நடத்தினார். இதுகுறித்து சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ள திரு. மன்சுக் மாண்டவியா, வளர்ச்சி அடைந்த பாரதம் 2047 மற்றும் ஜி-20 முன் வைத்த ஆலோசனைகளுடன் இணைந்து, தொழிலாளர் நலனுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் விதமாக, தங்களது விவாதம் அமைந்தது என தெரிவித்துள்ளார். தொழிலாளர் நலன்களை உள்ளடக்கிய மற்றும் நிலையான எதிர்காலத்தை வடிவமைப்பதில், சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் ஆழ்ந்த ஈடுபாட்டோடு செயல்படுவதை எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டுள்ளார்.

-------------------------

*டாக்டர் முருகன் (18)*

கரூர் மாவட்டம் தரகம்பட்டி பகுதியில 10ஆம் வகுப்பு சிறுமி கூட்டு பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு கொடுமையான முறையில் தாக்கப்பட்டுள்ள செய்தி, மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில், தொடர்ச்சியாக பள்ளி மாணவிகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருவது வேதனை அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். கடந்த 1 மாதத்தில் மட்டும், பள்ளி

தாளாளர், தலைமை ஆசிரியர், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களால், பள்ளிச் சிறுமிகள் மீது எண்ணற்ற பாலியல் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, ஒழுக்க நெறி சார்ந்த பயிற்சி வகுப்புகள் தேவைப்படுவதை இதுபோன்ற தொடர் சம்பவங்கள் நமக்கு உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார். கரூர் மாவட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாணவிக்கு அரசின் உயர்தர சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்றும், குற்றத்தில் ஈடுபட்டோருக்கு கடுமையான தண்டனைகளை பெற்றுத் தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தி உள்ளார்.

-------------------------

வேவ்ஸ்-2025 (7)

உலக ஆடியோ, வீஷுவல் மற்றும் பொழுதுபோக்கு குறித்த உச்சி மாநாடு, வரும் மே மாதம் 1ஆம் தேதி முதல் 4ஆம் தேதி வரை மும்பையில் நடைபெற உள்ளது. இதனையொட்டி பல்வேறு தலைப்புகளில் 30 முதல் 90 வினாடிகள் இடம்பெறக் கூடிய திரை வடிவப் படைப்புகளுக்கான போட்டிகளை, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் நடத்துகிறது. இதில், இம்மாதம் 5ஆம் தேதி நிலவரப்படி, இந்தியா மற்றும் 20 நாடுகளில் இருந்து 3 ஆயிரத்து 379 பதிவுகள் போட்டிக்கு வந்துள்ளன. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.......

(வாய்ஸ்)

*வாய்ஸ் – 1 20*

வேவ்ஸ் 2025 உச்சி மாநாடு நடைபெறுவதை ஒட்டி, ரீல் மேக்கிங் என்ற திரை வடிவத்தில் கதை சொல்லும் திறன்களை வெளிப்படுத்தும் போட்டி அறிவிக்கப் பட்டுள்ளது. இந்திய இணையம் மற்றும் மொபைல் சங்கமத்துடன், மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வீடியோ படைப்பாளர்களுக்கான இந்த போட்டியானது, படைப்புக்கான எல்லைக்களைத் தாண்டி, பரிசோதனை செய்யவும்,

புதுமைகளை வெளிப்படுத்தவும், இந்த நவீன டிஜிட்டல் யுகத்தில் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்த போட்டியானது, இந்தியா, ஊடகங்கள் மற்றும் பொழுது போக்குக்கான, உலகளாவிய மையமாக உருவெடுப்பதை உறுதி செய்வதாக உள்ளது. மேலும், டிஜிட்டல் படைப்பாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதையும் இது பிரதிபலிக்கிறது. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இந்தியாவில் உருவாக்குவோம் என்ற தொலை நோக்குப் பார்வைக்கு வலிமை சேர்ப்பதாகவும் வேவ்ஸ் 2025 உச்சி மாநாடு அமைகிறது. உலக அளவில், படைப்புத் துறையில், இந்தியாவில் அதிகரித்து வரும் செல்வாக்கை எடுத்துக் காட்டுவதோடு, உலகளாவிய படைப்பாளர்களுக்கான ஒரு விரிந்த தளமாக வேவ்ஸ் அமைகிறது. இந்தியாவை பொறுத்தவரை, அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து, லடாக், லே, ஜம்மு-காஷ்மீர், அந்தமான் நிக்கோபர் தீவுகள், திரிபுரா போன்ற தொலைதூர பகுதிகளில்

*வாய்ஸ் 2 – (11)*

இருந்தும், அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஆண்டிகுவா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற சர்வதேச நாடுகளில் இருந்தும் இந்த போட்டியில் பங்கேற்றுள்ளனர். இந்தியாவின் சிறப்புமிக்க உணவுப் பாரம்பரியம், சிலிர்க்க வைக்கும் பயணங்கள், பாரம்பரிய மற்றும் துடிப்பான சமகால நடனம் மற்றும் இசை, வளர்ந்து வரும் கேமிங் கலாச்சாரம், யோகா மற்றும் நல்வாழ்வு, தொழில்நுட்பம், என பல்வேறு துறைகளில், படைப்பாளர்கள் தங்களது படைப்புகளை உருவாக்க, அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. வரும் மார்ச் மாதம் 15ஆம் தேதிக்குள் தங்கள் படைப்புகளை அதற்கான இணைய தளத்தில் பதிவிட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் விவரங்களை WAVESINDIA.ORG என்ற இணைய தளத்தில் விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

------------------------

*பி.எம் கிசான்-புதுச்சேரி 1 (13)*

புதுச்சேரி அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை சார்பில், விவசாயிகளை கவுரவிக்கும் விழா, கருவடிக்குப்பத்தில் உள்ள காமராஜர் மணிமண்டபத்தில் இன்று நடைபெற்றது. இதில், பீகார் மாநிலம் பாகல்பூரில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்ட விவசாயிகளை கவுரவிக்கும் விழாவின் நேரடி ஒலிபரப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் பேசுகையில், பாரத பிரதமரின் விவசாயிகள் நிதி உதவித் திட்டத்தின் கீழ், சிறு-குறு விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபாய் மூலம் விவசாயிகள் பயனடைந்து வருவதாக தெரிவித்தார். பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம், விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை இடைத்தரகர்கள் இல்லாமல் விற்பனை செய்ய இ-நாம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள், விவசாயிகளின் நலனை மேம்படுத்த மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

*பி.எம் கிசான்-புதுச்சேரி 2 (3)*

இவ்விழாவில் பேசிய முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்……

(வாய்ஸ்)

*பி.எம் கிசான்-புதுச்சேரி* 3 (6)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விடுவித்த 19ஆவது தவணை நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சியில், புதுச்சேரியைச் சேர்ந்த 8 ஆயிரத்து 15 பேருக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் 1 கோடியே 60 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. பிரதமரின் விவசாயிகள் நிதி உதவித் திட்டத்தின் கீழ் பயன் பெறும் விவசாயிகள் சிலர் நமது செய்தியாளரிடம் பேசுகையில்……

(வாய்ஸ்)

-------------------------

*ஜெயலலிதா பிறந்தநாள் (8)*

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஜே. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாள் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப் பட்டது. இதனையொட்டி, கடற்கரை சாலையில் உள்ள மேரி கட்டிட அரங்கில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்து அவரது திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கேஎஸ்பி ரமேஷ், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி ஆகியோரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

-------------------------

*தமிழ் சங்கமம் (6)*

வாரணாசியில், கடந்த 15ஆம் தேதி தொடங்கிய 3ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமம் இன்றுடன் முடிவடைகிறது. இந்நிகழ்வில் பங்கேற்ற தமிழகக் குழுவினர், கங்கை நதியில் புனித நீராடி, பழங்கால கோவில்களில் வழிபாடு நடத்தினர். அகத்திய முனிவரை சிறப்பிக்கும் வகையில் 3ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமம் நடைபெற்றது. இதில், பங்கேற்ற நிகிலா என்ற ஆசிரியர், நமது செய்தியாளரிடம் கூறுகையில்......

(வாய்ஸ்)

-------------------------

*ரிசர்வ் வங்கி 1 (17)*

நிதி குறித்த கல்வி அறிவின் மூலம் பெண்களின் வளமான வாழ்க்கை என்ற கருப்பொருளின் அடிப்படையில் ஒருவார விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு, இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பாடு செய்துள்ளது. இன்று தொடங்கி, வரும் 28ஆம் தேதி வரை இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெறுகிறது. அருணாச்சால பிரதேசம் இட்டா நகரில், இன்று நடைபெற்ற இதற்கான தொடக்க விழாவில், இந்திய ரிசர்வ் வங்கியின் இட்டா நகர் பொது மேலாளர் திரு. அபிஷேக் மஜூம்தார் கலந்து கொண்டு, ஒருவார விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடக்கி வைத்தார்.

அப்போது உரையாற்றிய அவர், மகளிரை, நிதி மற்றும் சமூக ரீதியாக மேம்படுத்துவதை இந்த ஆண்டுக்கான கருப்பொருள் வலியுறுத்துவதாக கூறினார். வங்கியாளர்கள், வாடிக்கையாளர்களிடம் சென்று, அரசாங்கமும், வங்கிகளும் வழங்கும் அனைத்து டிஜிட்டல் சார்ந்த நிதி மற்றும் வங்கி செயலிகள் மற்றும் இணைய தளங்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்து ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலகமே இந்தியாவிவை நம்பிக்கையுடன் எதிர் நோக்குவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதித் திட்டத்தின் 19ஆவது தவணையின் கீழ், 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, விடுவித்தார்.

பாலியல் வன்கொடுமைகளை தடுக்க, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, ஒழுக்க நெறி சார்ந்த பயிற்சி வகுப்புகள் தேவைப்படுவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற விவசாயிகள் கவுரவ விழாவில் துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.